## சட்டமன்றத் தேர்தல் :

# 15 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!






சென்னை, மார்ச். 7 - சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

15 வது நாளாக நேற்று முன்தினம் (6.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க.வும் இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சு வார்த்தையையும் தொடங்கியது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

15வது நாளான நேற்று (06.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், கழக பொருளாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ், கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்பட்டது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் நேற்றுடன் (மார்ச் 6ஆம் தேதி) நிறைவடைந்தது.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக தலைமை அலுவலகத்தில் நேற்று (6.3.2026) பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருவண்ணாமலை தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியிடம் விருப்ப மனு அளித்தார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், கழக தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஈரோடு இறைவன் மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் CSR நிதியின் மூலம் 1300 பாக மகளிர் குழு உறுப்பினர்களுக்கு தையல் இயந்திரங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத்தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் - பரப்புரை !

## மகளிர்களை தொழில் முனைவோர்களாக உயர்த்தும் திராவிட மாடல் அரசு!






**சென்னை, மார்ச் 7– தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடுவீடான பரப்புரையை கழக மகளிரணியினர் மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லும் ஸ்டாலினின் மகளிர் படையினர் திராவிட மாடல் அரசின் மகளிர் நல திட்டங்களான மகளிர் உரிமை தொகை திட்டம், கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம், புதுமை பெண் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை விளக்கி கூறி ஆதரவு திரட்டி வருகின்றனர்.**

இன்றைய பரப்புரைக் கூட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக இயங்கிட வேண்டி கழக ஆட்சி அமைந்தவுடனே ரூ.2,756 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அதோடு ரூ.1.35 லட்சம் கோடி கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழுவினை சார்ந்த பெண்களும் சுயமாகவோ அல்லது குழுவாகவோ ஏதாவது ஒரு தொழில் செய்து முன்னேற்றமடைந்து வருகின்றனர்.

அதோடு ஸ்டார் அப் களை ஊக்குவித்து வரும் திராவிட மாடல் அரசு இன்று இந்தியாவின் முன்னணி ஸ்டார்ட் அப் மாநிலமாக மாறி உள்ளது. இந்த ஸ்டார்ட் அப்களில் 50% ஸ்டார்ட் அப் களுக்கு பெண்கள் தான் முதலாளிகள். இப்படி பெண்களும் தங்கள் சொந்த காலில் நின்று சுயமாய் தொழில் தொடங்க வேண்டும் என பல்வேறு முன்னெடுப்பு களை செய்து இன்று பல லட்சக்கணக்கான மகளிர் வாழ்வை மாற்றிக் காட்டி உள்ளது திராவிட மாடல் அரசு என்ற சாதனைகளை புள்ளி விவரங்களோடு மக்களிடம் எடுத்துக்கூறி ஆதரவு திரட்டப்பட்டது.